25.06.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண். 164 /2020 ) திருமதி.பர்வதானந்தம்.
<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> -

1) ஆதியில் சர்வே எண்.271/3 ல் முழுவிஸ்தீரணம் 4 ஏக்கர் 98 செண்டு என்றால் சரிதான். அது ஆரம்பத்தில் காசி விஸ்வநாதன் என்பவருக்குப் பாத்தியப்பட்டியிருந்தா என்றால் ஆமாம். 4 ஏக்கர் 98 செண்டில் தென்பக்கம் 2 ஏக்கர் காசிவிஸ்வநாதன் ஆசாரி என்பவர் அய்யலுசாமி என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டு அய்யசாமியிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தின் தற்போதைய உட்பிரிவு சர்வே எண்.271/3 சி என்றால் சரிதான்.மீதமிருந்த 2 ஏக்கர் 98 செண்டை காசிவிஸ்வநாத ஆசாரி கையிருப்பாக வைத்துக்கொண்டார் என்றால் சரிதான். கையிருப்பாக வைத்திருந்த 2 ஏக்கர் 98 செண்டை பகுதி பகுதியாக பிரித்து பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு காசிவிஸ்வநாத ஆசாரி பல நபர்களுக்கு பிரித்துக்கொடுத்த 2 ஏக்கர் 98 செண்டில் எனது நிலத்திற்கு பாதை எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. அந்த பல ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பார்த்தால் 2 ஏக்கர் 98 செண்டிலிருந்து எனது நிலத்திற்கு பாதை உள்ளதா என்ற தெரியவரும் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காசிவிஸ்வநாத ஆசாரி 2 ஏக்கர் 98 செண்டை பல நபர்களுக்கு விற்பனை செய்த நபர்களிடமிருந்து இந்த வழக்கின் பிரதிவாதி கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி பத்திரத்தில் எனது நிலத்திற்கு போவதற்கு பாதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது எனது பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி கிரையம் பெற்ற 2 ஏக்கர் 98 செண்டில் தற்போதைய சர்வே உட்பிரிவுகளின்படி 271/1,271/2,271/3 பி,271/4 ஏ ஆகியவைகள் ஏற்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. பிரதிவாதி கிரையம் பெற்ற 2 ஏக்கர் 98 செண்டை பிராது 3 வது தபசிலாக விவரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் 3 வது தபசில் சர்வே எண் உட்பிரிவை தப்பாக விவரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 2 ஏக்கர் 98 செண்டை மாரீஸ்வரி பாண்டியன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2) மாரீஸ்வரி பாண்டியன் எப்படி கிரையம் பெற்று அனுபவித்து வந்தாரோ அதே போன்று தான் பிரதிவாதி தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் நானும்

மாரீஸ்வரி பாண்டியனிடம் இருக்கும் போது நடந்து சென்றேன் தற்போது நடக்க விடாமல் தடுக்கிறார்கள். தாவாச்சொத்திற்கு மேற்குபுறம் ஓடை மற்றும் கரையை பிரதிவாதி ஆக்கிரமித்துக்கொண்டதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஓடை கரையை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் அந்த கரையின் வழியாக எனது இடத்திற்கு சென்றுவரமுடியும் என்றால் முடியாது. பிரதிவாதி ஓடையையும்,கரையையும் ஆக்கிரமிப்பு செய்தாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கரைவழியாக நான் போவததையும் பிரதிவாதி தடுத்தார், கரை வழியாக நான் மட்டும் போக முடியும். நான் மட்டும் சென்று எனது இடத்தில் விவசாயம் செய்ய முடியும் என்றால் முடியும். பிரதிவாதி ஓடை, கரையையும் ஆக்கிரமிப்பு செய்ததாக அரசு அலுவலகங்களில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். பிரதிவாதி ஓடை கரையை ஆக்கிரமித்துள்ளார் அதை அகற்ற பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்தில் ஓடை கரையை ஆக்கிரமித்ததை அளந்து தர கோவில்பட்டி வட்டாட்சியருக்கு மனுக்கொடுத்து பணம் கட்டினேனா என்றால் மனுக்கொடுத்தேன் செல்லான் கட்டவில்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அது சம்பந்தமான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதி இடத்தை அளக்கவிடாமல் தடுத்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பிராது 7 வது பாராவில் பிரதிவாதி அளக்கவிடாமல் தடுத்தாக சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3) தபசில் சொத்தை சுற்றி பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லுவதற்கு நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் வைத்து தாவா சொத்தை அளந்து பார்த்தால் ஆக்கிரமிப்பு இல்லை என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதால் ஆணையர் நியமனம்செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் ஆணையர் வைத்து அளந்துபார்க்க நடவடிக்கை எடுக்க தயாராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். ஊருக்கு தெற்கே ஒரு குளம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த குளத்திற்கு தென்வடலாக புஞ்சை வழியாக பாதை உள்ளதா என்றால் இல்லை அது சுடுகாட்டிற்கு போகக்கூடிய பாதை. குளத்திற்கு தெற்கு பக்கம் தென்வடலாக செல்லக்கூடிய பாதை வழியாக எனது புஞ்சை நிலத்திற்கு சென்றுவிடலாம் என்றால் சரியல்ல. இந்த பாதை

நீதிமன்ற ஆணையர் வைத்து அளந்து பார்த்தால் தெரிந்துவிடும் என்பதால் ஆணையர் நியமனம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து முக்கூட்டுமலை கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் முக்கூட்டுமலை என்றால் சரிதான். நான் தற்போது அங்குதான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி எங்கள் ஊரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தள்ளி விஜயகரிசல்குளத்தில் உள்ளார் என்றால் சரிதான் கிலோ மீட்டர் நான் அளக்கவில்லை. தற்போதும் பிரதிவாதி விஜயகரிசல்குளத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியும், வாதியாகிய நானும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு அருகில் பிரதிவாதி பட்டாசு ஆலை நடத்தி வருகிறார் என்றால் ஆமாம்.பிரதிவாதி பட்டாசு ஆலை வைத்து வசதியாக வாழ்ந்துவருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. பிராதில் பிரதிவாதி பட்டாசு ஆலை நடத்தி வருவதால் எனக்கு இடையூராக உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். பிரதிவாதியின் சொத்தின் வழியாக எந்த காலத்திலும் எனது சொத்திற்கு பாதை இருந்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல.

4) எனது பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள பாதை விவரத்தை பிரதிவாதியின் பத்திரத்தில் பாதை விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்க வேண்டும். பிரதிவாதியின் நிலம் சதுர வடிவில் அமைந்துள்ளது என்றும் பிராதில் நான் சொல்லியுள்ள தூர்ந்துபோன கிணறு என்பது பிரதிவாதியின் நிலத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆகையால் கிணற்றை ஒட்டி எனக்குபாதை இருப்பதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல உள்ளது. பிரதிவாதி விவசாயம் செய்து அனுபவம் செய்து வருவதால் பிரதிவாதியின் உட்புற நிலத்தின் வழியாகபாதை இல்லை என்றால் சரியல்ல. நான் பாதை இருப்பதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. குளத்திற்கு அருகில் தென்வடலாக செல்லும் பாதை தான் எனது நிலத்திற்கு செல்லும் பாதை என்றால் சரியல்ல. தற்சமயம் தாவாச்சொத்திற்கு மேற்கு பகுதியில் உள்ள கரை வழியாக எனது நிலத்திற்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் நிலத்தில் பாதை எதுவும் எனக்கு கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஓடையையும் வடக்கு பக்கம் மேடு அமைத்து ஆக்கிரமிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பக்கம் உண்மை தன்மை இல்லாததால் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி வேறு ஊரை சார்ந்த வேறு சமூகத்தைசார்ந்த நபர் எங்கள் ஊரில் வந்து தொழில் செய்துமுன்னுக்கு வருவதை கண்டு பொறாமை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உண்மையில்லை என்பதால் தான் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கை தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
25.06.2025.